Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

படச்சுருள்கள் எவைகளையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கனினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (ரி-8628) கிளிநொச்சி.

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி -25 12-10-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 236

### யாழ். அரியாலை மாம்பழம் சந்தியில்

# முச்சக்கரவண்டி மீது இராணுவ வாகனம் மோதியது

# பொதுமக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்


## படையினர் மக்கள் மீது கோரத் தாக்குதல் வீடுகளும் சோதனையிடப்பட்டன

**யாழ். கண்டிவீதியின் அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றை அடுத்து அங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டது. அத்துடன் கண்டிவீதியிலுள்ள வீடுகள் படையினரால் சோதனையிடப்பட்டன.**

நேற்று பிற்பகல் ஆறு மணியளவில் வேகமாக வந்த ராணுவ ட்ரக் வண்டி ஒன்று பொது மகன் ஒருவருக்கு சொந்தமான முச்சக்கர வண்டி ஒன்றை மோதிய தாகவும், ஆயினும் முச்சக்கர வண்டிச் சாரதி சம்பவ இடத்திலிருந்து குதித்து மயிரிழையில் தப்பிவிட்டதாகவும் முச்சக்கர வண்டி முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது நான்கு பிள்ளைகளின் தந்தையான பாண்டியன் தாழ்வு அரியாலையைச் சேர்ந்த எம்.மகேஸ்வரன் (வயது 44) என்பவரே காயமடைந்தார்.

இதனை அடுத்து அங்கு குவிந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க...)



கோப்பாயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ம்லெப். மாலதி நினைவு தின நிகழ்வில் நினைவுத்தூபிக்கு மலர்வணக்கம் செலுத்துவதை மேல் உள்ள படத்தில் காணலாம்.

## ஊடகவியலாளர் நால்வர் மீது படையினர் கடும் தாக்குதல்

### ஒருவர் படுகாயம்; புகைப்படக் கருவியும் பறிக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற விபத்து மற்றும் படையினரின் தாக்குதல் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக அங்கு குழுமியிருந்த குடாநாட்டின் உள்ளூர் பத்திரிகையாளர் நால்வர் படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

அங்கு சம்பவங்கள் தொடர்பான செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வலம்புரி அலுவலக செய்தியாளரான க.இதயபவன் படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டு தலையிலும் கையிலும் பலத்த காயம டைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

தம்மீது தாக்குதல் நடத்திய படையினரை தமது அடையாள அட்டையைக் காட்டி தாக்க வேண்டாம் என்று கேட்டிருந்த போதும் கைகளால் முதல் தாக்கப்பட்டதாகவும் பின்னர் கொட்டன்களால் தாக்கப்பட்ட தாகவும் கூடியிருந்த செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இதயபவன் கையில் வைத்திருந்த டிஜிற்றல் கமராவும் படையினரால் பறிக்கப்பட்ட தாகவும் இதுவரை அக் கமரா மீளக் கையளிக்கப்படவில்லை என வலம்புரி பத்திரிகை அலுவலகம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக சர்வதேச

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## தேசிய சொத்துக்களைப் பாதுகாக்க பாதயாத்திரை நடத்தத் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்ற அரசாங்கத்தின் கோட்பாட்டுக்கு எதிராகத் தேசிய சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பு நாளை பாத யாத்திரை ஒன்றை நடத்த வுள்ளது.

திஸ்ஸ மகாராமவில் இருந்து கதிர்காமம் வரை நடைபெறவுள்ள இப்பாதயாத்திரையில் இரண்டுக்கும் இடையில் சுமார் பத்து நகரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பத்து இலட்சம் கையெழுத்துக்களையும் திரட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது. (32)

## சிறிலங்காப் படையினருக்கு இந்திய கவச அங்கிகள்

### - கடனுக்கு கொள்வனவு செய்ய ஒப்பந்தம்

சிறிலங்காப் படையினருக்குத் தேவையான கவச அங்கிகளை இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ள ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

இந்திய அரசுடன் பிரதமர் ரணில் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார் என அவர் மேலும் கூறியுள்ளார். படையினருக்கு கவச அங்கிகள் பற்றாக்குறை குறித்து படைத்துறை அமைச்சு அரசிடம் கூறியதாகவும், அரசு தமது கோரிக்கை குறித்து மிகுந்த கவனம்

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## கைக்குண்டுகள் வவு.வில் மீட்பு

வவுனியா வைத்தியசாலையில் பழைய கைவிடப்பட்ட ஓர் கட்டடத்திலிருந்து ஒரு கைக்குண்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை புதிய ரகக் குண்டுகளாக காணப்படுகின்றன இராணுவம் அவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பி யுள்ளது. இதன்போது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இல.முஸ்லிம்களின் உரிமைகளில் இந்தியா கவனம் செலுத்தும்

### சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில் இந்தியா கவனம் செலுத்துமென இந்தியத் தூதுவர் நிருபம் சிங் வடகிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற கூட்டமைப்பிடம் உறுதி வழங்கியுள்ளார். அமைச்சர் ஹக்கீம் தலைமையில் இக் கூட்டமைப்பு இந்தியத் தூதுவரை அவரது இல்லத்தில் சந்தித்த போதே இவ் உறுதி மொழிவழங்கப்பட்டுள்ளது. வடகிழக்கில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களின் நிலை என்பன குறித்து முஸ்லிம் நாடாளுமன்ற கூட்டமைப்பு இந்தியத் தூதுவரிடம் கூறியுள்ளது. குறிப்பாக அடுத்த பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம்கள் தனித்தரப்பினராக பங்குபற்றவேண்டும் என இந்தியா புலிகளையும், அரசாங்கத்தையும் வற்புறுத்த வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதற்குப் பதிலளிக்கையிலே இந்தியத்தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## க.கா.கு. அரசியல் ஆலோசகர் புலிகளுடன் மன்னாரில் சந்திப்பு

சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அரசியல் ஆலோசகராக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ள நோர்வே நாட்டைச் சேர்ந்த ஜீ.எல். டேனி நேற்று முன்தினம் மன்னாருக்குச் சென்று விடுதலைப்புலிகளைச் சந்தித்து பேசியுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அமுதாப், துணைப்பொறுப்பாளர் அருணோதயன் ஆகியோர் புலிகள் தரப்பில் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

காலை எட்டு மணிமுதல் பதினொரு மணிவரை இச்சந்திப்

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## மட்டு.ஆரையம்பதி வீடொன்றில் புல்டோசர் சகிதம் படையினர் சோதனை

மட்டக்களப்பு நகரிற்கு தெற்கிலுள்ள ஆரையம்பதியிலுள்ள வீடொன்றை நேற்று முன்தினம் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதலில் ஈடுபட்டதுடன் அங்கு புல்டோசரால் குழி தோண்டியும் சோதித்துள்ளனர்.

தேடுதல் நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினர், பொலிசார், இராணுவத்தினர் எனப் பலர் ஈடுபட்டுள்ளனர். மாலதியின் நினைவுதின நிகழ்வில் மக்கள் உணர்வெழுச்சியுடன் ஈடுபட்ட வேளையிலேயே படையினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். செல்வாநகர் குளத்துக் காளிகோவில் வீதியிலுள்ள இவ்வீடு புலிகளின் உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானதெனவும், அங்கு ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே தேடுதலை மேற்கொண்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

புல்டோசர்களுடன் சென்ற படையினர் வீட்டில் தேடுதலை மேற்கொண்ட பின்னர் வீட்டு முற்றத்தை புல்டோசர் மூலம் கிளறியும் தேடுதலை மேற்கொண்டுள்ளனர். இதன்போது எவ்வித ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்பியோடிய விமானப்படைச் சிப்பாய் கொழு.குண்டுவெடிப்புத் தொடர்பாகக் கைது

(கொழும்பு)

கொழும்பு ரோஸ்மீட் பிளேசில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக விமானப் படையில் இருந்து தப்பி வந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி படைவீரரைப் பதினான்கு நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. (33)

# 2ஆம் லெப். மாலதியின் நினைவுநாளும் பெண்கள் எழுச்சிநாளும்



யாழ். கோப்பாயிலுள்ள 2ஆம் லெப். மாலதியின் நினைவுத்தூபி.



வவுனியாவில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வு



மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வு



திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு


## வரி விளம்பரம்

### ஆராதனா ஒலிப்பதிவு

கௌரிகாப்பு பாடல்கள், கந்தசஷ்டி கவசம், பக்தி கீதங்கள், புதிய திரை இசைக்கதம்பங்கள், பழைய பாடல்கள், ஒலிச்சித்திரங்களும் ஒலிநாடா உடன் பெற்றுக் கொள்ள.... யாழ். ஒளி புகைப்படக் கலையகம்- டிப்போச் சந்தி, யாழ். அருவி குளிரகம்- கிளிநொச்சி. ஆராதனா ஒலிப்பதிவு- வவுனியா. (3812)

### அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல், பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் போன்றன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு:- பரந்தன்வீதி, புதுக்குடியிருப்பு. (3713)


## தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு த.பு.க. உதவி

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் வங்காலைப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் தமது வீடுகளை இழந்த 32 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குடும்பம் ஒன்றிற்கு 8000 ரூபா பெறுமதியான உணவு மற்றும் உணவலீலாத பொருட்களை வழங்கி உள்ளது.

கடந்த ஆறாம் திகதி மேற்படி கிராமத்தில் குடிசைகள் நெருக் கமாக உள்ள பகுதியில் தீப்பற் றியதில் அருகருகாக அமைந்திருந்த 32 வீடுகளும் எரிந்து நாசமாகியது டன் அதனுள் இருந்த பெறுமதியான பொருட்கள் உட்பட அனைத்தும் முற்றாக எரிந்து நாச மாகியுள்ளன.

இந்நிலையில் இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவு, உணவல்லாத பொருடகளை வழங்கியுள்ளது. (லோ)

## காச நோய் வைத்தியப் பிரிவை மூட பொது மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரச வைத்திய சாலையில் இயங்கிவரும் காச நோய் வைத்தியப் பிரிவை அகற்றக் கோரி வெகுசன போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அப்பகுதி மக்கள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நீண்டகாலமாக மேற்படி வைத்தியசாலையில் இக் காச நோய் வைத்தியப் பிரிவு இயங்கி வருவதால் சன நெருக்கடி அதிகமான வைத்தியசாலை சூழல் வாசிகளுக்கு காச நோய் தொற்று ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதுடன், அண்மையில் அவ் வைத்தியசாலைக்கு அருகில் சிறுவர்கள் பயிலும் பாடசாலையும் அமைந்துள்ளது. இதனால் இவ் வைத்தியசாலையை அகற்றுமாறு கோரி கடந்த தை மாதம் முற்பகுதியில் போராட்டங்களை அப்பகுதி மக்கள் அமைப்புக்கள் முன்னெடுத்த போது அது உடனடியாக மாற்றம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுவரையும் மாற்றப்படாத நிலையில் மீண்டும் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (33)

## மாதகலில் படையினர் செயற்பாட்டால் மீன்பிடித் தொழில் பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகலில் உள்ள சங்குவில் மற்றும் திருவடிநிலை ஆகிய பிரதேசங்களில் உள்ள கடற் தொழிலாளிகள் தொழிலுக்குச் செல்வதற்கு ஏற்ற படகு வசதி இன்மையால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் வசித்த மீனவர்கள் தம் பாவனையில் வைத்திருந்த படகுகளை விட்டு விட்டு கடந்தகால இடம் பெயர்வுகளின் போது இடம்பெயர்ந்து சென்றதும்,

அப்பகுதியை ஆக்கிரமித்த படையினர் விட்டுச்செல்லப்பட்ட மீனவர்களின் படகுகள் மற்றும் இயந்திரங்களை சேதப்படுத்தியதுடன் பெரும்பாலானவற்றை தம் பாவனையில் வைத்திருக்கின்றனர்.

ஆயினும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து அப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறச் சென்றும் கூட, தாம் பாவனையில் வைத்திருக்கும் மீனவர்களுக்குச்சொந்தமான படகுகளை இன்னமும் உரியவர்களிடம் ஒப்படைக்காமையால் இம் மீனவர்களின் துன்பம் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்துப் பல கடற்படை அதி காரிகளிடமும் இம்மக்கள் கோரிக்கை விடுத்தும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. (33)

## வீதி ஒழுங்குநூல் பெறலாம்

(அலுவலக செய்தியாளர்)

வாகன உரிமையாளர் வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கென மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினரால் வெளியிடப்பட்டுள்ள "வீதி ஒழுங்கு நூல்" கிளி. மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

மேற்படி நூலினைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கிளி. அரச செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான வழிகாட்டல்கள் யாவும் இந்நூலில் அடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



நாட்டுப்பற்றாளர்

இசைமணி திருமதி மோகனாம்பிகை கணேசன்

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி இளைப்பாறிய இசையாசிரியை)

பாசத்தின் பிறப்பிடமாய் நேர்மையின்
திருவுருவமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்தீரே
அறிவூட்டிய ஆசானாய்
மானுடத்தின் மாட்சிமையை மண்ணில்
மலரச் செய்யவேண்டுமென வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே அம்மாவே
மறவோம் உம்மை மண்ணுலகில்
எம் உயிர் உள்ளவரை.

உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

12.10.2003 திங்கட்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

த.முகவரி:
இல 77, பாலிநகர்,
வவுனிக்குளம்.

திரு. அ. கணேசன் (கணவர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(888)

# அமெரிக்கா ஈராக்கை விட்டு வெளியேறி ஐ.நா.விடம் பொறுப்பைக் கையளிக்க வேண்டும்

## - இஸ்லாம் மாநாட்டு அமைப்பு நிர்ப்பந்தம்

**அமெரிக்கா மற்றும் நேசநாடுகளின் படைகள் உடனடியாக ஈராக்கை விட்டு வெளியேறி அந்நாட்டின் சீரமைப்புப்பணிகளை ஐ.நா.சபையிடம் ஒப்படைக்குமாறு இஸ்லாம் மாநாட்டு அமைப்புக் கேட்டுக்கொண்டுள்ளது.**

மலேசியாவில் புற்றா ஜெயா என்னும் இடத்தில் நேற்றுத் தொடங்கியுள்ள இந்த அமைப்பின் கூட்டத்தில் உயரதிகாரிகளிடையே உரையாற்றிய இவ்வமைப்பின் தலைமைச் செயலாளர் அபெலா ஹெட்பெல்கஸஸ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் ஈராக்கில் அன்னிய ஆதிக்கமும் பலஸ்தீன பிரச்சினையும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவை என்று கூறியுள்ளார்.

பயங்கரவாதம், உலகமயமாக்கல் ஆகியவை காரணமாக முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள முக்கிய சவால்கள் குறித்து மாநாடு விவாதிக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.


57நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இஸ்லாம் மாநாட்டின் அமைப்பின் உச்சிமாநாடு 2001ஆம் ஆண்டின் பின்னர் இப்போது தான் நடைபெறுகின்றது.

இம்மாதம்16,17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த அமைப்பு நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் ஐ.நா. தலைமைச்செயலாளர் கொபிஅனான் கலந்து கொள்ள உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு அமெரிக்க ஆதரவிலான ஈராக்கிய ஆளுநர் சபை பிரதி நிதிகளும் இந்த உச்சி மாநாட்டில் பங்குபற்றக்கூடுமென மாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## எச்சரிக்கை

நைஜீரியாவுக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் வாழும் முன்னாள் லைபீரிய சனாதிபதி சாள்ஸ் ரெயிலர் அங்கிருந்து லைபீரியாவை ஆட்சி செய்ய முயலவேண்டாம் என ஐ.நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது. அவரின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.



கைது செய்யப்பட்ட முஸ்லீம் மதகுருவை விடுதலை செய்யக்கோரி பாக்தாத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க வாகனத்தின் முன்படுத்திருக்கின்றார்கள்.



தெற்கு லெபனானில் 4 வயதுச் சிறுவனை ஏவுகணைத்தாக்குதலில் பலி கொடுத்த கவலையில் மூழ்கியிருக்கும் சிறுவனின் பாட்டி.

# சனநாயக பாதைக்கு திரும்ப வேண்டும்; காஸ்ரோ மீது சனாதிபதி புஷ் அழுத்தம்

கியூபா சனாதிபதி பிடல் காஸ்ரோ சனநாயகத்துக்கு திரும்ப வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

காஸ்ரோ அரசாங்கம் தானாக திரும்பமாட்டாது என்று வெள்ளை மாளிகைக் கூட்டம் ஒன்றில் தெரிவித்த சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கியூபா மீது பிரயாணத் தடைகளை விதிப்பதுடன் மேலும் அதிருப்தியாளர்கள் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு உதவப்போவதாகவும் கூறினார்.

கியூபா சனநாயகத்துக்கு திரும்புவதற்கான வழிமுறைகளைக் கைக்கொண்டால் அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட தடைகளைத் தளர்த்த அமெரிக்கா ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே முயற்சி மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

சுதந்திரமாக தேர்தலை நடத்துவதன் மூலமும் தாராள சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும் கியூபா சனநாயக வழிக்கு திரும்ப வேண்டும் எனவும் சனாதிபதி புஷ் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் கியூபாவில் இடம்பெற்ற நடவடிக்கை ஒன்றின் போது 75 அதிருப்தியாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட சம்பவத்தையும் அவர் சுட்டிக் காட்டினார். இதற்கிடையில் அமெரிக்கா அதன் அரசியல் நோக்கங்களுக்காக புளோரியோ மாநிலத்தில் குடியேறியுள்ள காஸ்ரோ எதிர்ப்பாளர்களை திருப்திப்படுத்துவதற்காக கியூபா மீது ஆத்திரக் கொள்கையை கடைப்பிடிக்கிறது என்று கியூபா சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

# பயங்கரவாதக் கொடுமைகளை ஒழிக்க முயற்சி செய்கிறோம்

## -உ.ப. சனாதிபதி டிக் சென்னி

(வாஷிங்டன்)

ஈராக் விடயத்தில் அமெரிக்கா மாத்திரமே சம்பந்தப்படுகின்றது. எமது கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் ஆக்கபூர்வமாக எதையும் செய்வதில்லைஎன்று அமெரிக்க உதவி சனாதிபதி டிக்சென்னி குற்றம் சாட்டியுள்ளார்.

பயங்கரவாத கொடுமைகளை புஷ் நிர்வாகம் ஒழிப்பதற்கு முயற்சி செய்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

ஈராக்கின் விடுதலைக்கு ஆதரவளிக்க மறுப்பவர்கள் சதாம் ஹுசைனின் கொடுமையான ஆட்சியை நிராகரிக்க மாட்டார்கள் என்று தெரிவித்த அமெரிக்க உதவி சனாதிபதி அத்தகைய ஒரு ஆலோசனையை பின்பற்றியே ஈராக் சனாதிபதி பதவியில் இருந்து விலக்கப்பட்டார் என்று கூறினார்.

ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அமெரிக்க உதவி சனாதிபதி ஈராக் மீது யுத்தம் தொடுத்ததை நியாயப்படுத்தும் அமெரிக்க நிர்வாகத்தை விமர்சிப்பவர்கள் மீது கண்டனம் தெரிவித்தார்.

# சூடானில் சமாதானத்தை முன்னெடுக்க ஐ.நா.பாதுகாப்பு சபை வலியுறுத்து

சூடானில் இருபது வருட காலம் நீடிக்கும் யுத்தத்திற்கு தீர்வு காணும் வகையில் சமாதான நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றை தயாரிக்கும் படி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கான பிரேரணையை பிரிட்டன் தயாரித்துள்ளது.

சூடான் அரசாங்கமும் கிளர்ச்சிவாத சூடான் மக்கள் முன்னணியும் கென்யாவில் சமாதானப் பேச்சுக்களை செவ்வாய்க்கிழமை ஆரம்பித் திருந்தன. சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெறுமானால் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து சூடானை விலக்க முடியும் என அமெரிக்கா, பிரிட்டன்,நோர்வே அடங்கிய முத்தரப்புக் குழு அறிவித்துள்ளது. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் பல ஆயிரம் வீரர்களைக் கொண்ட அமைதிப்படை ஒன்று அங்கு உருவாக்கப்படவேண்டும் என்று பாதுகாப்பு சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வான்வெளி அச்சுறுத்தலை தடுக்க இந்தியா ஒப்பந்தம்

ஏவுகணை உட்பட வான்வெளி அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும் அவற்றைக் கண்டுபிடிக்கவும் உதவும் ஹன்சஸன் முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை இஸ்ரேல் ரஷ்யாவுடன் இந்தியா செய்து கொண்டுள்ளது.

இந்த வான்வெளி கண்காணிப்பு அமைப்பு இந்திய விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இஸ்ரேலின் தயாரிப்பான இந்த ஹன்ஸன்றேடர்கள் உயர் சக்தி ரஷ்யாவின் போக்குவரத்து விமானத்தில் பொருத்துவதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் நேற்று முன்தினம் டில்லியில் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த முன்னெச்சரிக்கை அமைப்பை பெறுவதன் மூலம் இந்தியா 800-2000கிலோமீற்றர் தொலைவிலிருந்து ஏற்படக்கூடிய வான்வெளி அச்சுறுத்தலை கண்டறிய முடிவதுடன் அதனை தவிர்த்துக்கொள்ளவோ முறியடிக்கவோ முடியும்.





உலக ஆயுத விற்பனை நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளை ஆயுதங்கள் விநியோகம் செய்யாமல் கட்டுப்படுத்துமாறு கோரும் இயக்கத்தின் உறுப்பினர் மத்திய லண்டனிலுள்ள மயானம் ஒன்றினூடாக நடந்து செல்கிறான்.

# பாகிஸ்தான் எம்மீது போரைத் திணித்தால் அதற்கு தகுந்த பதிலடி வழங்கப்படும்

## - இந்தியப்பிரதமர் வாஜ்பாய் சூளுரை -

பாகிஸ்தானுடன் அமைதி முயற்சிகளை இந்தியா மேற்கொண்டு வருகின்ற போதும், இந்தியா மீது பாகிஸ்தான் போரைத் திணிக்குமானால், அதற்கு தகுந்த பதிலடியை இந்தியாகொடுக்கத்தவற மாட்டாது என இந்தியப்பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

நேற்று முன் தினம் பாங்கொக்கில் இந்திய மக்களிடையே பேசுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார். 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் போரில் பாகிஸ்தான் தோல்வியுற்றது. அதிலிருந்து பாகிஸ்தான் பாடம் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை போல் உள்ளதுஎன்று கூறிய அவர், லாகூருக்கு பேருந்துப் பயணம் சென்று பேச்சுக்கள் நடத்தி கூட்டுப்பிரகடனமும் வெளியிட்டோம்.

ஆனால், பாகிஸ்தான் நம்பிக்கைத் துரோகமாக போரைத்தான் தொடங்கியது என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்மீது குற்றம் சாட்டியுள்ளார்.



3000பேரை வேலை நீக்கம் செய்ய திட்டமிட்டுருப்பதை கண்டித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கு பற்றும் பெல்ஜிய வாகன உற்பத்தி நிறுவன ஊழியர்கள்

# இஸ்ரேலின் விஸ்தரிப்பு முயற்சி மீண்டும் ஆரம்பம்...?

பலஸ்தீன -இஸ்ரேல் இடையேயான நிலைமைகள் சமாதானத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்று கூறுவதற்கான சாத்தியக் கூறுகள் இன்றைய காலகட்டத்தில்



அங்கு காணப்படவில்லை.

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் தொடக்கம் அனைத்து வகைத் தாக்குதல்களையும் அவ்வப்போது நடத்திக் கொண்டுதான் இருக்கின்றது அதே போல் பலஸ்தீன விடுதலை இயக்கக் குழுக்களும் கார்க் குண்டு முதல் மனித குண்டுகள் வரை வெடிக்க வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இதனால் தான் பலஸ்தீன- இஸ்ரேலிடையே சமாதானம் என்பது தற்போதைய நிலையில் எட்டப்படுவதாகத் தெரியவில்லை என்று கூற வேண்டியுள்ளது.

அது மட்டுமன்றி இஸ்ரேல் பழையபடி பலஸ்தீனப் பகுதிகளில் முகாமிடத் தொடங்கியுள்ளது. என்பதற்கு ஆதாரமாக புதிதாக தனது துருப்புக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கை இஸ்ரேல் தான் எடுத்த முடிவுகளை நிலை நாட்டுவதற்கு ஏதுவாக அமையக்கூடும்.

எவ்வாறு எனில் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன், பலஸ்தீன சனாதிபதி யஸீர் அரபாத்தை நாடு கடத்தவோ அல்லது படுகொலை செய்யவோ இஸ்ரேலிய பாராளுமன்றத்தின் மூலம் முடிவுசெய்திருந்தார்.

அதற்கு அரபாத் பயங்கரவாதத்திற்கு எதிராக தனது நடவடிக்கைகளை முடுக்கி விடுகின்றார். அதுமட்டுமன்றி மத்திய கிழக்கு சமாதானத்திற்கு முட்டுக் கட்டையாகவும் எதிராகவும் செயற்படுகின்றார் என்றும் குற்றங்களை அடுக்கியுள்ளார்.

உண்மையில் யஸீர் அரபாத் பலஸ்தீன விடுதலைப் போராளிஎன்பது மட்டுமன்றி மக்களால் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதியாகவும் மிளிர்கின்றார். அதனால் அவரை நாடு கடத்துவது என்பதும் கொல்வது என்பதும் சிரமமான காரியமாக இஸ்ரேலுக்கு இருக்கின்றது.

இதனைத்தான், இஸ்ரேல், பலஸ்தீன சனாதிபதியை நாடு கடத்த முடிவு எடுத்ததை அறிவித்தவுடன் பலஸ்தீனக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அரபாத்தின் தலைமையிடமான ரமல்லா ஹவிலுக்கு அணிதிரண்டு சென்று அரபாத்திற்கு ஆதரவையும், இஸ்ரேலின் முடிவிற்கு எதிர்ப்பையும் தெரிவித்தமை எமக்கு விளக்கி நிற்கின்றது.

இதனால் தான் வன்முறை மூலம் அரபாத்தை கொலை செய்யவோ நாடுகடத்தவோ இஸ்ரேல் தயாராகி விட்டது எனலாம்.

ஏனெனில் அதனால் தான் தற்போது இஸ்ரேல் தனது படைகளை பலஸ்தீனத்தில் கைவிட்டுத் திரும்பிய இடங்களுக்கு அனுப்புவதில் மிகவும் முனைப்பாக செயற்படுகின்றது.

இதன் மூலம் அரபாத்திற்கு ஆதரவாக தடுக்கும் மக்களை கொன்றழித்து அரபாத்திற்கு பாதுகாப்பளிக்கும் பலஸ்தீன போராளிகளை அழித்தொழித்து அரபாத்மீது தமது கொலை வெறியை தீர்க்கத் தான் முன் நிக்கின்றது என்பதற்கு தற்போதைய துருப்புக்களை அனுப்பும் நிலை எடுத்தியம்புகின்றது.

அதனால் தான் யஸீர் அரபாத் எந்த நேரத்திலும் கொல்லப்படலாம்... அல்லது சிறைப் பிடிக்கப்படலாம்... அல்லது நாடு கடத்தப் படலாம்..என்று பரபரப்பாக எதிர் நோக்கப் படுகின்றது.

இந்த எதிர்பார்ப்புக்கு வலுவூட்டுவதாகத்தான் அமெரிக்காவின் நடவடிக்கைகள் அமைகின்றது.

கடந்த மாதம் இஸ்ரேலின் யஸீர் அரபாத்தை நாடுகடத்துவதான அறிவிப்பைத் தொடர்ந்து ஐ.நா.வுக்கான பலஸ்தீன பிரதிநிதி நஸீர் அல் கிட்வி ஐ.நா. சபையில் சமர்ப்பிக்க வரைவுத் தீர்மானமொன்றை தயாரித்திருந்தார். அதனை ஐ.நா.வுக்கான சிரியாவின் தூதர் ஐ.நா.சபையில் சமர்ப்பித்திருந்தார்.

அதில் பலஸ்தீன சனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலின் கொலை மிரட்டலில் இருந்து அவரைப்பாதுகாக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மத்திய கிழக்கிற்கான சமாதானத்தை பிளவுப்படுத்தி விடும் என்று ரஷ்யா இத் தீர்மானத்துக்கு ஆதரவு கூறியிருந்தது.

அதேபோல் இஸ்ரேல் இத்தகைய முடிவை எடுத்திருப்பது இஸ்ரேல் பலஸ்தீனமிடையே வன்முறைகளைத் தூண்டி விட்டு உயிரிழப்புக்களைத்தான் ஏற்படுத்தும் என்று ஐரோப்பிய ஒன்றியமும் அத்தீர்மானத்துக்கு ஆதரவாகக் தான் கைதூக்கியிருந்தது.

பலஸ்தீனத்தின் சட்ட ரீதியான பிரதிநிதி அரபாத். அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுவது அரசியல் ரீதியில் அவரை ஓரம் கட்டுவதான முயற்சி என பிரான்சும் அத்தீர்மானத்துக்கு ஆதரவு கூறிய போதும்,

அமெரிக்கா அத்தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கவில்லை என்பதுடன் இஸ்ரேலில் நடத்தப்பட்டுவரும் பலஸ்தீன குண்டுதாரிகளின் தாக்குதல்கள் பற்றி அத்தீர்மானத்தில் ஏன் கூறப்படவில்லை என வினா எழுப்பியது.

அதுமட்டுமன்றி அந்தத் தீர்மான வரைவை தனது வீட்டோ(**VETO**) அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐ.நா. சபையில் நிறைவேற்ற விடாது ரத்துச் செய்தும் விட்டது.

இந்த செயற்பாடு இஸ்ரேல் மீதான அமெரிக்காவின் அக்கறையை எடுத்துக் காட்டுகிறது என்பதுடன் இஸ்ரேல் ஒவ்வொரு தடவையும் ஐ.நா.சபையில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் போதெல்லாம் அதனைக் காப்பாற்றி விடுவதும் அமெரிக்கா தான் என்பதும் தெரிந்து கொள்ளக் கூடிய விடயங்கள்.

இதுமட்டுமன்றி மத்தியக் கிழக்கு சமாதானம் என்றாலும் சரி பிரச்சினை என்றாலும் சரி அமெரிக்கா எதிர் காலத்தில் யாருடைய பக்கம் தனது தலையைச் சாய்க்கும் ஒரு பக்கம் சார்பாக நடந்து கொள்ளும் என்பதை இத்தகைய சம்பவங்கள் எடுத்தியம்பத் தவறவில்லை.

அதேவேளை சிரியா மீது அண்மையில் இஸ்ரேல், தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிப்பதாக குற்றம் சாட்டி விமானத் தாக்குதலை நடத்தியிருந்தது.

உண்மையில் பலஸ்தீன சனாதிபதிக்கு ஆதரவான வரைவுத் தீர்மானத்தை சிரியத் தூதுவர்தான் ஐ.நா. சபையில் கொண்டு வந்திருந்தார்.

இதனை இஸ்ரேலும் அமெரிக்காவும் மறக்கவுமில்லை.மன்னிக்கவுமில்லை என்பதைத்தான் தீவிரவாத பயிற்சியளிப்பு என்று குற்றம் சாட்டப்பட்டு சிரியா மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறமுடியும்.

அதுமட்டுமன்றி பலஸ்தீனத்திற்கு ஆதரவாக சிரியா கைதூக்கியமைக்கும் எதிர் காலத்தில் சிரியா அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது.

எனும் எச்சரிக்கை போல 'முளையிலேயே கிள்ளி எறியும்' செயற்பாடாகக்கூட இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

இதனால்தான் பலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினை தீர்வது எப்போது....?, யஸீர் அரபாத்தின்எதிர்காலம் எப்படி அமையும்....?என வினா தொடுக்கவேண்டியுள் ளது.

இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினையின் மையம் ஜெருசலேம்தான். கிழக்கு ஜெருசலேம் பலஸ்தீனத் தலை நகராக வேண்டும் என்பதுதான் பலஸ்தீன மக்களின் ஆசையும், பலஸ்தீனப் போராட்டக் குழுக்களின் கனவுமாக இருக்கின்றது.

இந்த மக்களின் ஆசையை பிளக்கும் வகையிலும், போராட்டக்குழுக்களின் கனவைத் தகர்க்கும் நடவடிக்கையாகவும்தான் பெத்தலேகேமையும் ஜெருசலேமையும் பிரிக்கும் முயற்சியாக சுவர் எழுப்பப்பட்டது. இந்த சுவர் எழுப்பும் நடவடிக்கை இன்று வரை விஸ்தரிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது.

இஸ்ரேல் எவ்வித காரணங்களை முன்னிட்டும் இந்த நடவடிக்கைகளை கைவிட்டதாக இல்லை. இந்தச் சுவரின் சில பகுதி சீனச்சுவரை ஞாபகப்படுத்துவதாக பார்வையாளர்கள் கூறுகின்றார்கள். அதேபோல் சுவரின் பல இடங்களில் மின் தாக்கும் கம்பிகளாகவும் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இஸ்ரேல் (1948ஆம் ஆண்டு) தோன்றியது முதல் அதன் நோக்கம் அனைத்துமே பலஸ்தீனப் பகுதிகளை நோக்கிய தனது விஸ்தரிப்பு நடவடிக்கைதான். எனவே பலஸ்தீனப்பிரச்சினையின்ஆணிவேர் இஸ்ரேல் தான் என்று அவதானிகள் கருத்தாக நிலவுகின்றது.

இஸ்ரேலின் இந்த விஸ்தரிப்புக்கு எப்போதும் அமெரிக்கா பச்சைக்கொடி காட்டத் தவறியதில்லை. ஏனெனில் பலஸ்தீனர்களைப் பிரிக்க வேண்டும். போராடும் குழுக்களை உடைக்கவேண்டும் என்பது இஸ்ரேலின் தனிப்பட்ட எண்ணமல்ல. அமெரிக்காவின் சிந்தனையும் அதுதான்.

அதனால்தான் இஸ்ரேலின் எந்தவொரு நடவடிக்கைக்கும் உற்ற தோழனாக அமெரிக்கா கை கோர்த்து நிற்கின்றது

தான் எடுக்கும் முடிவுகள் ஐ.நா. சபையில் விவாதத்திற்கு வந்தாலும் தன்னைக் காப்பாற்ற அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை(**VETO**) கையிலெடுக்கும் என்பது இஸ்ரேலின் பாதுகாப்பான நம்பிக்கை.

அந்த நம்பிக்கைக்கு வித்திடுவது அமெரிக்காவில் வாழும் யூதர்களின் செல்வாக்குத்தான்.இந்தச் செல்வாக்கு என்பது அமெரிக்காவின் பொருளாதாரம் தொடங்கி சகல துறைகளுடனும் தொடர்புடையது.

அதாவது மருத்துவம் தொடங்கி விண்வெளி வரையான சாதனைகளைப் புரிந்தவர்கள், புரிந்துகொண்டிருப்பவர்கள் யூதர்கள் தான். அதனால் இஸ்ரேலைக் கைவிடுவது என்பதோ எதிரான நடவடிக்கைகள் என்பதோ அமெரிக்காவின் பொருளாதாரத்தை ஆட்டி அசைத்து தரைமட்டமாக்கும் முயற்சி எனலாம்.

இத்துணிவில் தான் இஸ்ரேல் அடிக்கடி 1972ஆம் ஆண்டு முதல் யஸீர் அரபாத்தை கொன்றொழித்துவிட பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கிறது

அன்று தொடக்கம் பலஸ்தீன விடுத



ஏரியல் ஷரோன்

லைக்கான வெகுஜனமுன்னணிப் பேச்சாளர் முதல், யஸீர் அரபாத்தின் தலைமையகம், ஏனைய இடங்களிலுள்ள பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகங்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்திவருகின்றது.

1964இல் ஐ.நா.சபை பலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்தது. 1974இல் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் தலைவரான யஸீர் அரபாத்தை இஸ்ரேல் நாடுகடத்தவும் கொலை செய்யவும் முயற்சிக்கிறது என்றால்... அதற்குக்காரணம் அதன் பிடியில் அமெரிக்கா வெனும் வல்லரசு இருப்பதுதான்.

எனவே இன்றைய புஷ் முதல் 2004இல் புதிய சனாதிபதியோ அல்லது தொடர்ந்து வரும் சனாதிபதிகளோ இஸ்ரேலுக்கு எதிராகக் கட்டாயம் குரல் கொடுக்கப்போவதில்லை.

எனவே அமெரிக்காவையும் இஸ்ரேலையும் தட்டிக்கேட்கும் உரிமை ஐ.நா. சபைக்கு மட்டுமேயுண்டு.

இன்றைய நிலையில் ஐ.நா சபை ஈராக் மீதான போரை அமெரிக்கா நியாயமின்றி தொடர்ந்துள்ளதாக சாடத்தொடங்கியுள்ளது.

அதனால் அமெரிக்காவை இனிவரும் காலங்களில் ஐ.நா.சபை தட்டிக்கேட்டு, அதன் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுமானால், இஸ்ரேல் தானாக தனது நடவடிக்கைகளை முடக்கிக் கொள்ளக்கூடும்.

## வளலாய் காளி கோவிலைப் புனரமைக்க சிறிலங்காப் படையினர் தடை!

### -பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் உள்ள காளி கோவிலை புனரமைத்து வழிபாடு நடத்த படையினர் தடைவிதித்துள்ளதாக அவ் ஆலய நிர்வாகத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேகப் பணிகள் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவிருப்பதால் அதற்குரிய முன் ஏற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, ஆலயப் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொண்ட படையினர் உடனடியாக புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறு எச்சரித்துள்ளனர்.

மேற்படி ஆலயத்தில் விழாக்கள் கொண்டாடப்படுவது தமது பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் எனச்சுட்டிக்காட்டியே இவ் எச்சரிக்கையைப் பிறப்பித்துள்ள னர்.

இதேவேளை இவ் ஆலய சூழலை அண்மித்து பலாலி படைத்தளத்தின் முன் அரண்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## மது விற்பனை நிலையத்தால் பொதுமக்கள் பெரும் விசனம்

(ஒட்டுசுட்டான்)

கற்சிலை மடுச் சந்தியில் உள்ள மது விற்பனை நிலையத்தால் மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இந் நிலையம் புளியம் மரம் ஒன்றின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இதே மரத்தின் நிழலுக்காக பேருந்தில் செல்ல காத்திருக்கும் பயணிகள் நிற்பது வழக்கம்.

மது விற்பனை நிலையத்திற்கு மது அருந்த வருபவர்கள் மது அருந்திவிட்டு தகாத வார்த்தைகளைப் பேசுகின்றனர், மது அருந்தியதும் சுய நினைவு இழந்து வீதியில் கிடப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (05)

# அரசை விரைவில் கவிழ்க்க வேண்டும் அதற்குமுன் எதிர்க்கட்சித் தலைவர் மாற்றம்!

## - தேச பிரேமி இயக்கம் தீர்மானம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசை விரைவில் கவிழ்ப்பதற்காக எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் எனவும் அதற்கு முன் புதிய எதிர்க் கட்சித்தலைவரின் தலைமையின் கீழ் பலமுள்ள கட்சியொன்றை அமைத்துக் கொள்ளவேண்டும் எனவும் ஜே.வி.பி. தலைமையிலான தேச பிரேமி இயக்கம் தீர்மானித்துள்ளது.**

மிக அவசரமாகவும் அவசியமாகவும் கூட்டப்பட்ட இரகசிய சந்திப்பில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது எதிர்க்கட்சித்தலைவராக இருக்கும் மகிந்தராஜபக்ஸ ஜே.வி.பி. ஆதரவைத் திரட்டி கூட்டணியமைக்கும் முயற்சி காலால் சித்திரம் வரைவது போன்றதாகவும் அவரது நடவடிக்கைகள் அரசை அச்சுறுத்தும் படி இல்லை எனவும் கூறும் தேசபிரேமி இயக்கம் தமது பணிகளில் அனுரா பண்டார நாயக்கவை ஈடுபடுத்த வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளது.

எந்த வழியிலாவது மீண்டும் கூட்டணியமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்குவதாயின் ராஜபக்ஸவின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என சனாதிபதி எடுத்துள்ள தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கும் இச்சந்திப்பில் முடிவாகியுள்ளது. எனினும் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இதற்கு மேலாக அரசுக்கெதிராக தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மக்களிடையே கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்தி நாடுபூராகவும் எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவிக்க வேண்டும் எனவும்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசின் சமாதானத்துக்கெதிராகவும் வரும் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கின்றவேளையும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும் எனவும் தேசபிரேமி இயக்கம் முடிவு செய்துள்ளது.

மேலும் இதற்காக அனைத்து தொழிற்சங்கங்களின் ஆதரவை பெறும் நோக்கில் அவற்றை வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடுத்தவும் அரசுக் கெதிரான தமது எதிர்ப்பை ஊடகங்கள் மறைக்காமல் வெளிப்படுத்தும் படி கேட்கவும் மீண்டும் ஒரு சந்திப்பை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொருட்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பேரலை, தர்மக்கேணி,வண்ணங்கேணி, முல்லையடிப்பகுதிகளில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு உலர் உணவு இல்லாத பொருட்கள் சேவாலங்கா நிறுவனத்தினரால் கடந்த 2ஆம் திகதி பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (12)

## சுசந்திகா ஜெயசிங்க மீது நீதிமன்று பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

குறுந்தூர ஓட்டவீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கவுக்கு எதிராக மாளிகாகந்த நீதிமன்றம் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள் ளது. கடந்த வாரம் சுசந்திகாவின் கணவர் செலுத்திச் சென்ற பதிவு செய்யப்படாத கார் இராணுவ வீரர் ஒருவரின்காருடன் மோதியது. இதன் பின்னர் சுசந்திகாவின் கணவர் குறிப்பிட்ட இராணுவ வீரரைத் தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது இதனையடுத்து நீதிமன்றில் ஆஜரான சுசந்திகாவின் கணவர் நந்ரகுமாரவை மாளிகாகந்த நீதிமன் றம் பிணையில் செல்ல அனுமதித் தது இதற்கு சுசந்திகாவே பொறுப்பேற்று கையெழுத்திட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் தம்பிக்க நந்ரகுமார நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என கேட்கப்பட்டபோதும் அவர் ஆஜராகவில்லை இதனையடுத்து இவர்கள் இருவரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (32)

## வெளிநாட்டில் இருந்துவந்த பெண்களுடன் மோசமாக நடந்து கொள்ளையிலீடுபட்டோர் கைது!

(கொழும்பு)

வெளிநாட்டில் இருந்துவந்த வவுனியாவைச் சேர்ந்த இரண்டு யுவதிகளை ஏமாற்றி பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டு, அவர்களிடம் இருந்த பெருமளவு தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்த 6 பேரைக் கொண்ட குழுவினரைக் கட்டுநாயக்க பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 6 பேரும் கட்டுநாயக்காவில் இருந்து பயணிகளை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்லும் வாடகை வான்களைக் கொண்டு தமது தொழில்களை நடத்தி வருபவர்களாவர். பயணிகள் இவர்களிடம் வாடகைக்கு வாகனங்களை அமர்த்தும் வேளைகளில் அவற்றில் பெண்கள் இருந்தால் அவர்களிடம் முறைகேடாக நடந்து கொள்ளைகளில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களால் பாதிக்கப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த இரண்டு யுவதிகள், செய்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (32)

## - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலை -

## உபவேந்தரின் பொறுப்புக்கள் பீடாதிபதிகளிடம் பகிர்ந்தளிப்பு!

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் அனைத்துப் பொறுப்புகளும் பீடாதிபதிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அண்மையில் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கலகம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பான மாணவர் அமைப்பு இவர்மீது குற்றச்சாட்டை எழுப்பியிருந்தது. இதன் அடிப்படையில் சணதிபதி, பல்கலைக்கழக கல்வி தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஆதரவுடன் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் எப்பிட்டவத்தையை அனைத்துப் பொறுப்புகளிலும் இருந்து விலக்கியுள்ளார். (32)

## சுகாதார சேவையினர் மற்றுமொரு பணிப் புறக்கணிப்புக்கு தயாராகின்றனர்

(கொழும்பு)

சுகாதார சேவையினர் மீண்டும் பணிப்புறக்கணிப்புக்குத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே சுகாதார சேவையினர் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி சுமார் பத்து நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பிரதான கோரிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது.

எனினும் பணிப்புறக்கணிப்பின் போது, ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை மற்றும் இடமாற்றங்கள் என்பனவற்றை இரத்துச் செய்யக்கோரிவருகின்றபோதும் சுகாதார அமைச்சு அதற்கு இதுவரைஇணங்கவில்லை. இந்த நிலையில் சுகாதார அமைச்சுக்கும், சுகாதார சேவை ஊழியர் சங்கத்துக்கும் இடையில் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது. இதில் குறிப்பிட்ட விடயங்களில் பெரிதாக இணக்கங்கள் எட்டப்படாததை அடுத்து எதிர்வரும் புதன்கிழமை வரை சுகாதார அமைச்சருக்கு, ஊழியர் தொழிற்சங்கம் காலக்கெடு விதித்துள்ளது. தமது கோரிக்கை நிறைவேற்றப் படாவிட்டால், மீண்டும் பணிப்புறக்கணிப்புக்குச் செல்லப் போவதாகவும் தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. (32)

## அமெ. பிரதி வர்த்தகப் பிரதிநிதி சிறிலங்காவிற்கு விஜயம்!

(கொழும்பு)

அமெரிக்காவின் பிரதி வர்த்தகப் பிரதிநிதி ஜோசவ் சீரன் சின சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இவருடன் சிறிலங்காவிற்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் அஸ்லி வில்ஸ் மற்றும் அமெரிக்காவின் விசேட பிரதிநிதியான டேவிற் ஸ்போரரும் கொழும்புக்கு விஜயம் செய்கின்றனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு வரும் இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் தனியார் துறை முதலீட்டாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்கள்.

கடந்த வருடம் யூலை மாதம் இரு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட அமெரிக்க சிறிலங்கா வர்த்தக முதலீட்டு உடன்பாட்டின் பிரகாரமே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது. இதற்கு முன்பதாக இரு தடவைகள் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பற்றைக் காடுகள் அகற்றப்படாமையால் பாம்புக் கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு!

### -திலீபன் மருத்துவமனைகளில் பலர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

பதினெட்டு மாதகாலத்தில் தியாகதீபம்திலீபன்மருத்துவசேவையின் பத்துநிலையங்களிலும் 372 பேர் பாம்புக்கடி சிகிச்சை பெற்றுள்ளனர் என தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் வெளியிடப்பட்ட புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த 2002ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் இவ்வருடம் ஆனி மாதம் வரையான காலப்பகுதியிலேயே மேற்குறித்த தொகையினர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் திலீபன் மருத்துவமனைகளான நயினாமடுவில்-64 பேரும், கற்சிலைமடுவில்-61 பேரும், ஆழியவளையில்-60 பேரும், அளம்பிலில்-46 பேரும், பூநகரியில்-42 பேரும், கறுக்காய்க்குளத்தில்-34 பேரும், ஐயன்குளத்தில்-26 பேரும், மாங்குளத்தில்-24 பேரும், நெடுந்தீவில்-09 பேரும், புளியங்குளத்தில்-06 பேரும் என மொத்தமாக 372 பேர் இவ்வாறு பாம்புக்கடிக்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ்வாறு பாம்புக்கடிக்கிலக்காகியவர்களில் பெருமளவானவர்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேறி வருபவர்களே ஆகும். தற்போது மீள் குடியேறி உள்ள மக்களின் குடியிருப்புக்கள் பாதுகாப்பானதாக இன்மையாலும் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் பற்றைக் காடுகள் வளர்ந்திருப்பதாலுமே அதிகளவானவர்கள் பாம்புக்கடிக்கிலக்காகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (லோ)

## மேல் மாகாண தமிழ் மொழிமூல பாடசாலைகளில் சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் நியமனம்!

### - ரத்துச் செய்ய த.ஆ. சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்திலுள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் புதிதாக சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

"திறைசேரியினதோ, மத்திய மைச்சரினதோ, அமைச்சரவையினதோ அங்கீகாரமின்றி நாட்டின் சட்டதிட்டத்திற்கும், யாப்பிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந் நியமனத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு வேண்டுகிறோம்" என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சர், மேல்மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கண்டனக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்ப் பாடசாலைகளை சிங்களமயமாக்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கையே இது. எனவே தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள், கல்விசாரா ஊழியர்களை நியமித்து சிங்களமயமாக்க திட்டமிட்டு சாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியில் கல்வி கற்க வேண்டுமென்ற அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதோடு வேலை வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி துஷ்பிரயோகம் செய்ததுடன் தமிழர்களின் கல்வியை அழிக்கும் செயற்பாட்டையும் முதலமைச்சர் குரே செய்துள்ளார்.

எனவே, ஹொரண, மத்துகம, களுத்துறை ஆகிய வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள ஆசிரியர் நியமனங்களை உடனடியாக ரத்துச் செய்து கல்வியில் சகல இனங்களுக்கும் சமவாய்ப்பு வழங்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## - தலைமன்னார் பியரில் -

## கண்ணிவெடி அகற்றிய இளைஞர் மிதிவெடியில் சிக்கி படுகாயம்

(மன்னார்)

தலைமன்னார் பியரில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிப்படுகாயமடைந்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த சிவகரன் என்பவரே படுகாயமடைந்தவராவார் கடந்த புதன்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும் இவர் தற்போது மன்னார் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுப்பு

## வியாபார நிலையங்களிலும் திடீர் சோதனை

(முள்ளியவளை)

**முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரும் மாகாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சுகாதார விழிப் புணர்வு தொடர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.**

இது தொடர்பாக முல்லை மாவட்ட சுகாதார சேவைப் பொறுப் பாளர் கருத்து தெரிவிக்கையில்,

இனிவரப்போகும் மழை காலத் தில் தொற்று நோய்கள் மற்றும் நுளம்பு உற்பத்தி ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் தற்போது மாவட்டத்திற்குட்பட்ட வியாபார நிலையங்கள், தேனீர் உணவுச்சா லைகள், பொது இடங்கள், பொதுக் கிணறுகள் போன்றவற்றின் முன் னோடி நடவடிக்கையாக சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம். இந் நடவடிக் கையின் போது வியாபார நிலையங் களில் காலாவதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதுடன் உணவு நிலையங்க ளில் சுகாதார விழிப்புணர்வு நட வடிக்கை இறுக்கமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருவதுடன் முதற் கட்டமாக பொலித்தீன்களான லஞ் சீற் சிறிய சொப்பின் பை ஆகியன தடைப் பொருட்களாக தடைசெய்து வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். தமிழீழ சுகாதார சேவையினால் முள்ளியவளைப் பிர தேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுகாதார பரிசோதனையில் சுகாதார சீர்கேடான நிலையில் உள்ள வெதுப்பகத்தில் பழைய வெதுப் பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ் வெதுப்பகம் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டது.

இதுபோன்று திடீர் சுகாதார பரிசோதனை நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

மேலும் காலாவதியான வைத்திய மருந்துகள் கண்டுபிடிக் கப்பட்டதுடன் அந்நிலையத்தில் விற் பனையில் ஈடுபடுபவர் எவ்விதமான வைத்திய மருந்துப் பொருள் அனுப வம் அற்றவர் என்பதாலும் மேற்படி நிலையம் மூடப்பட்டதாகவும் முல் லை. மாவட்ட தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் நாயகன் தெரிவித்துள்ளார். (ஆ)

## நூல் வெளியீடு

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களின் 'கூலிக்கு வந்தவன்' (நாவல்) நூல் வெளியீட்டு விழா ஆரியகுளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில், செங்கையாழியனின் தலைமையில் நாளை பி.ப.3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# புதுக்குடியிருப்பு-வற்றாப்பளை வீதியில் பயணிப்போர் அவலம்!

(முள்ளியவளை)

புதுக்குடியிருப்பு வற்றாப்பளை வீதியினால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது மக்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வீதியானது கடந்த ஆண்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வற்றாப் பளைப் பகுதியில் குறுகிய தூரமும் புதுக்குடியிருப்பில் இருந்து வற்றாப் பளை நோக்கி குறுகிய தூரமும் சாதாரண புனரமைப்பு செய்யப்பட்டு இடையில் சுமார் 3 கிலோமீற்றர் தூரம் எதுவித புனரமைப்பும் செய் யப்படாது அவ்வீதி படுமோசமான குன்றும் குழியுமாகவுள்ளது. அத் தோடு அப்பகுதியில் ஆபத்தான நிலையில் உள்ள மதகும் திருத்தப் படாதுள்ளது. இவ்விடத்தில் செல் லும் பேருந்து, ஊர்திகள் தடம் புரள்வதுபோல் அங்கும் இங்குமாக ஆடிஆடி அசைந்து செல்லும் நிலை யை அவதானிக்க முடிகின்றது. இவ் வீதியில் அண்மையில் பய ணிகள் ஊர்தி மதகில் தடம் புரண்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தமிழ் தேசிய இனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கூட்டணி அலுவலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய இனத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமகால நிலைமைகள் குறித்து அரசியல் ஆய்வரங்கொன்று இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மார்டின் வீதி இல 30இல் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளை அலுவல கத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடை பெறவுள்ள இவ் ஆய்வரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் குறித்தும் அது குறித்த மக்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதில் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், ஆதரவாளர்களும் கூடி கடுமையான விவாதங்களை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. (33)

# நெடுந்தீவுப் பகுதியில் பேருந்து சேவை தடை!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிற்கான பேருந்து சேவை தடைப்பட்டுள்ளதால் அப்பகுதி பயணிகள் பெரும் அவ திப்பட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிக்கு இதுவரை காலமும் நடைபெற்று வந்த வட பிராந்திய போக்குவரவுச் சபையின் ஒரே ஒரு பயணிகள் சேவை பேருந் தும்.

கடந்த 3ம்திகதி முதல் பழுத டைந்துள்ளதாலேயே இவ் அவதி நிலை தோன்றியுள்ளது. எனினும் இச்சேவையை நிவர்த்தி செய் வதற்கு தனியார் சிற்றூர்தி சேவை யை நடத்தும் உரிமையாளர்களும் சாரதிகளும்.

கடற்படையினரின் சோத னைக் கெடுபிடிகளுக்கும், பாஸ் நடைமுறைகளுக்கும் அஞ்சி போதி யளவு சேவையை ஆற்ற பின் நிற்கின்றமையே இவ்வாறு அவல நிலை அதிகரிக்க காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பிரதேச சபையினரின் ஒழுங்குபடுத்தலில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் முள்ளியவளைப் பகுதியில் பல இடங்கள் துப்புரவு வேலைகளும் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் முள்ளிய வளை வடக்கு திரேசா முன்பள்ளி துப்புரவு செய்யப்பட்டு சிறு புன மைப்பு வேலைகள் செய்யப்பட் டுள்ளதுடன் முள்ளியவளை நோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாட சாலை இடமாற்றத்திற்கான காணி துப்புரவு செய்யப்பட்டு வருவதுடன் மேற்படி திட்டத்தில் முள்ளியவளை பள்ளவெளி கமப்பாதை புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஆ)

# கூட்டுறவாளர் சங்க பேராளர் சங்கமம் கிளிநொச்சியில் நடைபெற ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கூட்டுறவாளர் சங்கப் பேராளர் சங்கம நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதியன்று கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் மேற்படி கூட்டுறவாளர் சங்கம நிக ழ்வு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர் கள் 600ற்கு மேற்பட்டோர் இச்சங்கம நிகழ்வில் கலந்து கொள்ளவுள் ளனர்.

வட-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் இளங்கோ மற்றும் 9 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட உதவி ஆணையாளர்களும் இச் சங் கம நிகழ்வில் கலந்து கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## - ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் -

# நடமாடும் வியாபாரிகளால் மக்கள் பெரும் அசௌகரியம்!

(வட்டக்கச்சி)

நடமாடும் துவிச்சக்கர வண்டி 'ஐஸ்பழ' விற்பனையாளர்களால் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவர்கள் ஒலிபெருக்கி மூலமாக பாடல்களை பெரும் சத்தத்துடன் ஒலிபரப்பிச் செல்கின்றனர். இது அமைதியான செயற்பாடுகளைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்துள் ளது.

குறிப்பாக பாடசாலைச் சுற்றா டலில் இவர்களின் பிரசன்னம் கற் றல், கற்பித்தல் செயற்பாடுகளை பெரிதும் பாதிப்பதாக அமைகின்றன.

மேலும் வீதிகளில் விபத்துக் கள் கூட ஏற்படும் அபாயம் இவ் வாறு ஒலி எழுப்பிச் செல்வதினால் ஏற்பட்டும் வருகின்றது.

பணி ஒலி எழுப்பி ஐஸ்பழம் விற் பனையில் ஈடுபட்டு வந்த நடமாடும் வியாபாரிகள், தற்போது ஒலி பெருக்கிகளைப் பாவித்து வருகின் றனர். இந் நிலையில் எதிர் கொள் ளப்படும் நெருக்கடிகளைக் கவனத் தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என் பது அநேகரின் அவாவாகவுள்ளது. (12)

## ஆவணங்களை பெற்றுக் கொள்க!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக் களத்தில் 2003 ஆடி மாதத்தில் புதிதான உந்துருளி பதிவுகளை மேற்கொண்டவர்களின் ஆவணத்து ஆவணங்களும் திணைக்களத்திற் குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி ஆடிமாதம் புதிய பதி வுகளை மேற்கொண்டவர்கள் தங் கள் ஆவணங்களை அலுவலக நாட்களில் திணைக்களத்தில் வந்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவியாணையாளர் ஆ.கந்தசாமி வேண்டியுள்ளார். (சோ)


## தமிழீழ வைப்பகம் வழங்கும் துரித நகையடைவுக் கடன் சேவை

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

- குறைந்த வட்டி
  - மாதாந்தம் 1.66% வீத வட்டி மட்டுமே தற்போது அறவிடப்படுகிறது.
- கூடிய தொகை
  - தற்போது கடன்தொகையாக ஒரு பவுணுக்கு உரூபா 6,300/- வரை வழங்கப்படுகிறது.
- நீடித்த சேவை
  - தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும் மாலை 3.00 மணி வரை நகையடைவுக் கடன் சேவையை வழங்குகின்றோம்.

*: உங்கள் வைப்புக்களிற்கு அதிக வட்டி –

ஏன்?? உங்கள் நிறைவே எங்கள் மகிழ்ச்சி!

*: எங்கள் கடன் வசதிகளிற்கு மிகக் குறைந்த வட்டி

ஏன்?? உங்கள் மகிழ்ச்சியே எங்கள் நிறைவு –

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்.

தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம், தமிழரின் காப்பகம்.

(சி-8649)



### சிந்தனைக்கு

விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப் பாட்டை எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-10-2003

## உரிமை என்பதே பிரச்சினை!

"இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்று இல்லாது சமமான அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்துடன் கூடியதான சுயநிர்ணய உரிமை அவர்களுக்குக் கிட்டும் போதுதான் சமாதான சூழ்நிலை தொடரும்" என்ற யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களின் கூற்றுக்கள் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கும் -இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கான காரணியைத் தேடுபவர்களுக்கும் பொருத்தமானதொரு பதிலாகும்.

அதாவது, இலங்கையில் சமாதானமும்,அமைதியும் நிலவ வேண்டும், நீடிக்க வேண்டும் என விரும்புகின்றவர்களுக்கு ஆயர் சௌந்தரநாயகம் அவர்கள் சமாதானம் எப்பொழுது தோன்றுவது, சாத்தியமாகும் என்பதற்கு மிகவும் பொருத்தமான பதில் ஒன்றை அளித்துள்ளார். அதாவது சமாதானத்திற்கான அடிப்படை என்ன அதாவது பிரச்சினைக்குக் காரணம் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், சமாதானம் தொடரவும் வேண்டுமென வலியுறுத்தும், அன்றி விருப்பம் கொண்டுள்ளவர்கள், பொதுவில் விடுக்கும் கோரிக்கையானது விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும், பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என்பது ஆகும். அதாவது, புலிகளின் ஆயுதப் போராட்டமே பிரச்சினைக்குக் காரணம் என்பது போல இது உள்ளது.

இவர்கள் எவருமே, இனப்பிரச்சினைக்கு அடிப்படை என்ன? ஆயுதப் போராட்டம் ஏன் ஆரம்பித்தது? என்பது குறித்து மனங்கொள்பவர்களாகவோ, ஆராய்பவர்களாகவோ இல்லை. ஆயுதப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் கைவிட்டால் இனப் பிரச்சினைக்குத் தீர்வும்,சமாதானமும் ஏற்பட்டுவிடும் என்றே அவர்கள் நம்புகின்றார்கள்.

ஆனால், விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டாலோ,பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதினாலோ இவர்கள் எதிர்பார்க்கும் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. ஏனெனில், புலிகள் ஆயுதங்களைக் கைவிடுதல் என்பது இனப்பிரச் சினையையும் ஆயுதப் போராட்டம் உருவாவதற்கான காரணியையும் இல்லாது ஒழித்துவிடப்போவதில்லை. அதுமட்டுமல்ல, பெரும் இன்னல்களுக்கு மத்தியிலும் ஆயுதப் போராட்டத்திற்குத் தமது பூரண ஆதரவை வழங்கிய தமிழ் மக்கள் தமது உரிமைகளையும் தேவைகளையும் துறந்துவிடப் போவதுமில்லை.

இதனால், விடுதலைப்புலிகள் இயக்கம் தான் இனப்பிரச்சினைத் தீர்விற்கும், சமாதானத்திற்கும் முட்டுக்கட்டை அல்ல. தமிழ் மக்களின் உரிமைகளும், தேவைகளுமே இனப் பிரச்சினைக்கும் அமைதி இன்மைக்கும் காரணமாகும். ஆகையினால், தற்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கம் போராட்டத்தை நிறுத்தினாலோ அன்றிக் கைவிட்டாலோ கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வோ அன்றி இணங்கினால் சமாதானமோ நிலவிவிடப் போவதில்லை. இன்று இல்லாது விட்டாலும் நாளை மீண்டும் தமிழ் மக்களின் உரிமைக்கான போரும், சமாதானமின்மையும் ஏற்பட்டே ஆகும்.

ஆகையினால்,இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதும் சமாதானம் என்பதும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்குதல் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்க முடியும். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என நினைப்பது அவரவர் அபிலாசைகளையும், எதிர்பார்க்கையையும் நோக்கமாகக் கொண்டதே ஒழிய பிரச்சினைக்குத் தீர்வாக அமைய மாட்டாது.

இலங்கைத் தமிழ் மக்களின் விருப்பம், தமிழ் மக்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். சம அந்தஸ்துள்ள பிரஜைகளாகத் தமிழர்களும் மதிக்கப்பட வேண்டும், என்பதே ஆகும். இதில் அறிஞரில் இருந்து பாமர மக்கள் வரை வேறுபாடு கிடையாது. ஆகையினால், தீர்வைப்பற்றியும், சமாதானத்தைப்பற்றியும் பேசும் எவராகிலும் முதலில் பேச வேண்டியது இது பற்றியதாகவே இருக்க வேண்டும்.

ஆகையினால், தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வில் அக்கறை கொண்ட எவருமே முதலில் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படுதல் வேண்டும் என்பது பற்றியே பேசுதல் வேண்டும். ஆயுதப் போராட்டம் பற்றியோ,அதன் வழிமுறைகள் பற்றியோ பேசுதல் என்பது பிரச்சினைகளையே திசைதிருப்பி விடுவதாகவே அமையக் கூடியதாகும்.

அதுமட்டுமல்ல, சிறிலங்கா அரசாங்கங்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டு செயற்படுதல் என்பதும் சாத்தியப்பாடானதொன்றல்ல. ஏனெனில், ஒன்றிற்குப் பல தடவை தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டுவிட்டனர். ஆகையினால், பிரச்சினைக்குத் தீர்வு, சமாதானம் என்பவை சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளில் எடுத்து வைக்கும் அடிகளைப்பொறுத்தே இருக்க முடியும்.

அதாவது, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் உரிமைகள், தேவைகள் என்பனவற்றை வழங்குவதன் மூலமே சமாதானம் நிலைநிறுத்தப்பட வாய்ப்புண்டு. தமது அரசியல் அபிலாசைகள்,தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் நடாத்த விழைந்தால் பிரச்சினைக்குத் தீர்வென்பதும், சமாதானம் என்பதும் சாத்தியமாகப் போவதில்லை. ஒடுக்கப்படும் இனம் ஒன்றின் உரிமைகள் வழங்கப்படும் வரை மூக்குள்ளவரை சளி என்பது போல் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கும்.

# தடைசெய்யப்பட்ட 'கிளஸ்டர்' குண்டுகள் சிறிலங்கா படையினரால் பாவிப்பு!

### யாழ்.இல் நடத்தப்பட்ட ஆய்வில் நிரூபணம்

வடக்கு-கிழக்கில் கடந்த காலங்களில் சிறிலங்காப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலின் போது, தடை செய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகளை சனசந்தடிமிக்க மக்கள் வாழும் பகுதிகளில் படையினர் பயன்படுத்தியதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

"அண்மையில் நாம் யாழ்ப்பாணம் சென்று அங்கு நடத்திய சோதனைகள் மூலம் இதனை அறியக் கூடியதாக இருந்தது. குண்டு வீச்சில் பாதிப் படைந்த கட்டடங்கள் மற்றும் வெற்றுச் செல்கள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

"இராணுவத்தினரே இந்தக் குண்டுகளைப் பயன்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன" என சர்வதேச தெற்காசிய பங்களிப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி டபிள்யூ ஜேம்ஸ் அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் கடந்த 09ஆம் திகதி நடந்த சந்திப்பில் பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். நிலைமைகளை நேரில் சென்று அவதானித்து வந்ததாகத தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்;

ஆயுதங்கள் வெடிபொருட்கள் தொடர்பான விடயங்களில் தேர்ச்சி மிக்க ஒருவருடன் நான் யாழ்.சென்றிருந்தேன்.

அங்கு இடிபாடுகளுடன் காணப்படும் கட்டடங்களில் நடத்தப்பட்ட சோதனைகள் மற்றும் வெற்று ஷெல்களைக் கொண்டு இவை பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகள் எனத் தெரியவந்தது.

இந்த நடவடிக்கை 'நுளம்பைக் கொல்ல கிரனைட்டைப் பாவிப்பது, போன்ற செயலாகும்.

சிறிலங்காவில் தற்போது ஆயுதங்கள் தாராளமாக விற்பனைக்குக் கிடைக்கின்றன. இவை சாதாரண குடிமகனின் கையருகே சென்றடைகின்றன.

சிறிலங்காவில் குற்றச் செயலகள் அதிகரிக்கவும் இது ஒரு காரணமாக அமைகின்றது.

சாதாரணமாக சிறிலங்காவில் ஏ.கே.47ரக துப்பாக்கி நூறு அமெரிக்க டொலருக்கும் சிறிய ரகத் துப்பாக்கிகள் பத்துடொலருக்கும் கிடைக்கக் கூடியதாக வுள்ளது எனவும் அற்புதராஜா கூறியுள்ளார்.

### - 2004 வரவு-செலவுத் திட்டம் -

# பாதுகாப்புச் செலவினம் ரூ.170 கோடி உயர்வு; கல்விக்கான ஒதுக்கீட்டில் ரூ.290 கோடி பறிப்பு!

(கொழும்பு)

கல்விக்கான ஒதுக்கீட்டை 290 கோடி ரூபாவால் குறைத்தும் நாட்டில் சமாதானம் நிலவும் வேளையில் பாதுகாப்புச் செலவினத்தை 170 கோடி ரூபாவால் அதிகரித்தும் அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு 9.6இல் இருந்து 72.4 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

நிதியமைச்சர் சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கு 1542 இலிருந்து 1252 கோடியாக குறைத்தும் பாதுகாப்பமைச்சுக்கு 5038.2 கோடியிலிருந்து 5208.2 கோடியாக அதிகரித்தும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைச்சு, உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு, போக்குவரத்து, பெருந்தெரு, நீர்ப்பாசனம், விமானப் போக்குவரத்து, கொள்கைத் திட்டமிடல், சுகாதாரம் போன்றவற்றுக்கு சென்ற வருடத்தை விட இவ்வருடம் அதிக நிதி ஒதுக்கபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

குறைந்த நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற அமைச்சுக்களுள், துறைமுக அபிவிருத்தி, கப்பற்போக்குவரத்து, புனரமைப்பு, மீள் குடியேற்றம், விவசாயக்கைத்தொழில், நீர்ப்பாசன நீர்வளம், மேல்மாகாண சபை அபிவிருத்தி, மின்சக்தி, மாகாண அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்கள் அடங்கும்.

# சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி. கூட்டணியின் ஆயுட்காலம் இன்னமும் முடிந்துவிடவில்லை

### -பொ.ஐ.மு.பொதுச் செயலாளர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஜே.வி.பி.யினதும் "கூட்டணி"முயற்சிகளுக்கு மேலும அவகாசமிருப்பதாகவும் அதன் ஆயுட்காலம் முடிந்து விட்டதாகக் கருதுவதில் எவ்வித அர்த்தமுமில்லை எனவும் பொதுசன ஐக்கிய முன்னணி செயலாளர் தி.மு.ஜயரத்ன வெளியிட்ட அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

கூட்டணி அமைக்கும் முயற்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் முன்னணியின் உறுப்பினரிடையே சந்தேகங்கள் எழும்பியிருப்பினும் அவர்கள் இதிலிருந்து பின்வாங்கவில்லை எனவும் அவர்கள் மாவட்ட ரீதியில் கூட்டங்களை நடத்துவதிலும் கட்சிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவதிலும் காணப்படுவதானது இதனை உறுதி செய்வதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது, இவ்வரசு பதவிக்கு வந்துஇரண்டு வருடங்களாகியும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனவும் பொருட்களின் விலை கூடியும் வ்வசாயிகளின் நெல்லுக்கான விலை குறைந்தும் இருப்பதாகவும் இதனால் இரு அரிசி ஆலை உரிமையாளர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றது.

இவ்வரசுக்கெதிராகப் பல ஊர்வலங்களும், எதிர்ப்பார்ப்பாட்டங்களும், வேலைநிறுத்தங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதே கண்ட பலன். வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் சமாதானம் என்ற போர்வையில் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.

எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும பொ.ஜ.முன்னணி அரசில் ஜே.வி.பி.க்கு ஆதரவு கிடைப்பது தெளிவாகும். ஐ.தே.க.வுக்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரவளிககாது. இதனால் வரும் தேர்தலில் போட்டியிட ஐ.தே.கட்சி அச்சம் கொண்டிருக்கிறது.

ஜே.வி.பி., பொ.ஐ.மு. இடையில் தீவிர முரண்பாடுகள் இருப்பதாகக் கூறுவது முற்றிலும் பொய். இதனைப் பிளவுபடுத்தும் வகையில் வேறு கட்சியினரே புரளியைக் கிளப்பிவிட்டுள்ளனர் எனவும் மேற்படி ஜயரத்னவின் அறிக்கை கூறுகிறது.

# 2 ஆவது இனிங்சை இந்திய அணி நிறுத்தியது; நியூசிலாந்து களத்தில் 1 விக்—48 ஓட்டங்கள்

அகமதாபாத்தில் இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 4 ஆவது நாளான நேற்று ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து தனது இரண்டாவது இனிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை தனது முதல் இனிங்சில் 282 ஓட்டங்களுக்கு 8 விக்கட் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து 340 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது. இவ்வணியின் நாதன் ஆஸ்லே சதமடித்தார். பின்னர் தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த இந்திய அணி மிகக் குறுகிய நேரத்தில் நியூசிலாந்து அணி வீரர்களின் பந்து வீச்சுக்குத் தொடர்ச்சியாக 6 விக்கட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது.

இதன்படி 370 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடும் நியூசிலாந்து 48 ஓட்டங்களுடன் 1 விக்கட்டை இழந்து களத்திலுள்ளது.

# ஆஸி.யின் மத்தியூ ஹைடன் புதிய உலக சாதனை

அவுஸ்திரேலியா-பேர்த்தில் நடைபெற்ற சிம்பாவ்வேக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய வீரர் மத்தியூ ஹைடன் 380 ஓட்டங்களைக் குவித்து மேற்கிந்தியத்தீவின் பிறைன் லாறாவின் (375) சாதனையை முறியடித்துள்ளார்.

இதுவரை 15 சதங்களையும் ஒரு இரட்டைச் சதத்தையும் பெற்றுள்ள இவர் பெற்றுள்ள ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இதுவரை 17வீரர்கள் 300ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளனர்.



# மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வேண்டும்

## வன்செயல்களைத் தடுக்க சில்வா ஆலோசனை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் ஏற்படும் ஊழல் மோசடிகள் தவிர்க்கப்பட வேண்டுமாயின் பொதுத் தேர்தலைப் போல அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துதல் நன்று என முன்னாள் பிரதித் தேர்தல் ஆணையாளர் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐந்து வருட ஆயுட் காலத்தைக் கொண்ட மாகாண சபை அனைத்தையும் தற்பொழுது ஒரே தினத்தில் கலைத்துத் தேர்தல் நடத்துவது முடியாது. அதனால் அதற்கான புதிய சட்டவரைபைக் கொண்டு வந்து ஒரே தினத்தில் தேர்தலை நடத்தினால் அரசியல் வன்முறையாளர்கள் ஒரே இடத்தில் கூடுவது தவிர்க்கப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற "வன்முறையற்ற தேர்தல்" எனும் தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போது அவர் கூறியிருக்கிறார்.

இங்கு உரையாற்றிய தயான ஜயதிலக,தேர்தலில் வன்முறையைத் தடுக்க வேண்டுமாயின் தற்பொழுது செயலற்றுப் போன கிராமமட்டத்திலான மக்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கிராம அபிவிருத்திச் சங்கங்களை மீண்டும் உயிரூட்ட வேண்டும் என்றார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கும் போது நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் சனாதிபதியும் இணைந்து 1987 இந்திய-சிறிலங்கா ஒப்பந்தத்துக்கு அமைவாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டிய நோக்கத்தில் மாகாண சபை முறையை உருவாக்கினார்கள். ஆனால் மாகாண சபை மட்டும் நிலைத்திருப்பதாகவும் யுத்தம் நிறுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு சென்றோர் மீது தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

வல்லிபுரஆழ்வார் கோவில் தீர்த்தத் திருவிழாவுக்குச் சென்று திரும்பிய அடியார்களை வல்வை பாலத்தில் வைத்துப் படையினர் கடுமையான சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை மேற்படி அடியார்களில் பெருமளவானோர் ஆலயத்துக்குச் சென்றதன் காரணமாக அடையாள அட்டை கொண்டு செல்லவில்லை எனவும் இதனால் அவர்கள் முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

# திருமலையில் பதற்றம் தணிவு ஊரடங்குச்சட்டம் நீக்கம்

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணம் திருகோணமலைக்கு அருகே கிண்ணியாப் பகுதியில் தமிழ், முஸ்லிம்களுக்கிடையே மீள்குடியேற்றக் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக ஏற்பட்ட பதற்றம் நேற்றுத் தணிந்து அங்கு அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட பிரதித்தலைவர் மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், துரைரட்ண சிங்கம், மௌரூப், ரபிக் ஆகியோர் தமிழ்-முஸ்லிம் மக்களைச் சந்தித்துள்ளனர்.

# தமிழ்க் கூட்டமைப்பு — ரணில் நாளை சந்திப்புக்கு ஏற்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நாளை சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயம், வடக்கு கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக விரிவாக ஆராயப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

இதனிடையே இக்கூட்டத்தின் போது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பில் கடுமையான போக்கை கடைப்பிடிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# நிறைவு விழா

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற பயிற்சிகளின் நிறைவு விழா நாளை காலை 9.00 மணிக்கு யாழ்சாலை கிளிநொச்சியிலுள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# சிவில் உடையில் சென்று காரணம் கூறாது கைது செய்யமுற்பட்டமை குற்றமே

## -யாழ்.ம.உ.ஆ.முன்பொலிஸ் அதிகாரி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

சாதாரண உடையில் சென்று கைது செய்வது, கைது செய்யப்படுகின்றமைக்குரிய காரணத்தைக் கூறாது கைது செய்வது தவறு என்பதைப் பொலிஸ் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி யாழ்.நகரில் வைத்துச் சாதாரண உடையில் வந்த பொலிசார்,கைது செய்யப்படுகின்றமைக்குரிய காரணத்தைக் கூறாமலே பொதுமகன் ஒருவரைக் கைது செய்ய முற்பட்டபோது ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து வீதியில் வைத்து அவரைத் தாக்கியது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நடத்திய விசாரணைகளின் போதே இவ்வாறு பொலிசார் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த 8-ஆம் திகதி காலை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணையில் தாக்கிய பொலிஸ் அதிகாரி அசேகத் மற்றும் தாக்கப்பட்ட ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சு.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்

இதன்போது சிவிலில் வந்து காரணம் கூறாது கைதுசெய்ய முற்பட்டமை தவறு என அறிந்திராத காரணத்தினாலேயே தான் அவ்வாறு நடந்துகொண்டதாகவும் சட்டதிட்டத்தை மீறியமை தன்குற்றம் என்பதையும் ஒப்புக்கொண்டாலும் தாக்கப்பட்டமை என்ற குற்றச்சாட்டைத் தான் மறுப்பதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தமையைத் தொடர்ந்து அடுத்த வாரப்பகுதியில் இவ்விசாரணையில் தாக்கப்பட்ட சாட்சியத்துக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (33)

# மாணவிக்கு கௌரவம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே கடந்த 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கொழும்பு சுகதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற (29.23 மீற்றர்) சீவரட்ணம் தாரணி நேற்று கிளி.மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் வெள்ளிக் கோப்பை வழங்கப்பெற்று கௌரவிக்கப் பெற்றார்.

இவர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வட-கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதல் மற்றும் குண்டெறிதலில் முதல் இடத்தைப் பெற்று முனைய சாதனைகளை முறியடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி.சாந்தபுரம் பகுதியில் குடிசை எரிந்து நாசம்

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி சாந்தபுரப் பகுதியில் அருணாசலம் ஆறுமுகம் என்பவருடைய வீடு திடீரெனத் தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இது பற்றித் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மதிய உணவு சமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு அடுப்பில் சோறு வெந்து கொண்டிருந்த வேளையில் அடுப்பிலிருந்த தீ வீட்டுக் கூரையின் மேல் பற்றிக்கொண்டது. இதனால் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. 10 அங்கத்தவர்கள் வசித்துவந்த வீட்டில் இருந்த தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பல ஆவணங்களும் உடைமைகளும் நாசமாகியுள்ளன. ஊரக எழுச்சித் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள இக் குடிசையில் வாழ்ந்தோருக்கு கிளி. கிழக்குப் புனர் வாழ்வுக் கழகத்தினர் உடுபுடைவைகள் சில வழங்கி உதவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிக்கப்படும் சாத்தியமில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜாவின் பதவிக்காலம் முடிவடையும் நிலையில் அவரது பதவிக்காலம் நீடிக் கப்படமாட்டாது என்று தெரிவிக் கப்படுகிறது.

இதனையடுத்து இப்பதவிக்கு யார் தெரிவானவர் என்ற கேள்வி எழுந்துள்ளது. 30 பேர் சிரேஷ்ட அதிபர் என்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் மீட்கப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரும் சம்பந்தப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டில் இவரது பதவி நீடிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்ட நிலையில், யார் பொலிஸ்மா அதிபர் என்பது இன்னும் சில நாட்களில் வெளியாகும். (32)

# தனியரசுக்கான கட்டுமானங்களை புலிகள் அமைத்து வருகின்றனர்

## ஈ.பி.டி.பி. கூறுகின்றது

தமிழீழத் தனியரசின் தேவையான கட்டுமானங்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வருவதாக ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் என்பவற்றுடன் பாராளுமன்றத்திற்கான கட்டடம் ஒன்றையும் வடக்கில் புலிகள் கட்டிவருவதாக ஈ.பி.டி.பி. தெரிவித்தது.

இது இணைந்த இலங்கையில் வடக்குக்கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் புலிகள் விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்த ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தனி நாடு ஒன்றை இறுதித்தீர்வாகப் பெறுவதே புலிகளின் திட்டம் எனத் தெரிவித்தார். அரசாங்கம் இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட அனைத்துக் தரப்பையும் அமைதி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# வழக்குத்தாக்கல்

பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, கம்பளைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அண்மையில் பொய்க்குற்றச்சாட்டொன்றின் அடிப்படையில் தம்மைக் கைது செய்தமைக்கு எதிராகவே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (32)

## முச்சக்கரவண்டி...

யாழ். கண்டிவீதியின் இருபுறமும் வழிமறித்து மறியல் போராட்டங்களில் ஈடுபட்டதுடன் படையிருக்கு எதிரான சுலோகங்களையும் எழுப்பினர்.

கடந்த ஒருசில வார காலப் பகுதிகளில் குடாநாட்டில் இடம் பெற்ற ஏழாவது சம்பவமாக இது இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அங்கு ஆர்ப்பாட்டத்திலும் வீதிமறியல் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்த பொதுமக்களை நோக்கி அங்கு குவிக்கப்பட்டுள்ள பெருமளவு படையினரும் பொலிசாரும் குண்டாந்தடிப் பிரயோகத்தையும் கண்ணீர்ப்புகை வகைக் குண்டுகளையும் பிரயோகிக்க ஆரம்பித்தனர்.

இதனை அடுத்து பொது மக்கள் அப்பகுயில் கலந்துகொள்ள முற்பட்டவேளை ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதேவேளை நேற்று இரவு எட்டு மணிவரை நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவத்தின்போது கண்டி வீதியின் வீதி ஓரங்களில் குழுமியிருந்த வீடுகளிற்குள் பிரவேசித்த படையினர் அங்குள்ள பொதுமக்களின் உள் உணவு, குடும்ப அட்டைகளைப் பரிசீலித்து மேலதிமாக இருந்த நபர்களைப் பார்த்து வெளியேற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளில் பதிவு செய்யப்பட்ட பதிவாளர்கள் தவிர்ந்த வெளி ஆட்கள் எவரும் தங்க வேண்டாம் என்று வற்புறுத்தியதாகவும் வீடுகளின் உட்புகுந்தும் பலவந்தமாக பொதுமக்கள் இழுத்துவரப் பட்டுத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இதனால் அப்பகுதி வீதியினூடாக போக்குவரத்து பல மணி நேரம் துண்டிக்கப்பட்டதாகவும் அது தற்போது கழுக நிலைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (27,16,33)

## ஊடகவியலாளர்...

கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு வலம்புரி பத்திரிகை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை தினக்குரல் பத்திரிகையின் அலுவலக செய்தியாளரான ஆ.சபேஷ்வரன், அலுவலக புகைப்படப்பிடிப்பாளரான தி.சிவபாலன் மற்றும் உதயன் புகைப்படப் பிடிப்பாளரான எஸ்.பார்த்தீபன் ஆகியோரும் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, இப்பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து இன்று வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட குடாநாட்டுப் பத்திரிகை அமைப்புக்கள் சர்வதேச கண்காணிப்புக் குழுவின் நல்லூர் கோவில் வீதியில் உள்ள அலுவலகம் முன்பாக மதியம் 12 மணிக்கு மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக அழைப்பு விடுத்துள்ளது.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து இடம்பெறுவதைக் கண்டித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் யாழ். படைத்தலைமையைச் சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கப்போவதாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருகின்ற நிலையில் படைத்தலைமை திட்டமிட்டு பத்திரிகையாளர்களைப் பழிவாங்க முற்படுவதாகக் குற்றம் சாட்டுகின்ற வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் இவ்விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சரத் பொன் சேகாவைச் சந்திப்பதற்கான கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## க.கா.குழு...

பில் கண் காணிப்புக் குழுத் தரப்பில் மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஆன் சென்டர் கலந்து கொண்டார்.

இதேவேளை இவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சிறிலங்கா...

செலுத்தி கவச அங்கிகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, போருக்குத் தேவையான ஆயுத தளபாடங்களை புலிகள் சேகரித்து வருகிறார்களெனவும் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

படைத்தலைமையகத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். புலிகள் ஏவுகணைகள் உட்பட பல்வேறு நவீன போர் தளபாடங்களை கொள்வனவு செய்துள்ளார்கள் எனவும், அண்மைக்காலமாக இவ்வாறான கொள்வனவில் அதிகளவில் அவர்கள் ஈடுபட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இதன் மூலம் புலிகள் போருக்குத் தயாராகி வருகின்றமை தெரிய வருகிறதென கூறிய அவர், தமது படையினரும் தயார் நிலையில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டதெனவும் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.